மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்
O.P No. 36-2023
Date 10.03.2026

Deposition of Witness R.W. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனஞ்ஜெயன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2வது எதிர்மனுதாரர் அலுவலத்தில் துணை வட்டாட்சியராக நான் பணியாற்றி வருகிறேன். வழக்கு கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது சாட்சியத்தை நான் நிரூபண பிரமாண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். 15.10.2022ந் தேதியிட்ட நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரால் நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் நகல் **எ.ம.சா.ஆ.1**. 15.10.2022ந் தேதியிட்ட நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரால் பிறப்பிக்கப்பட்ட செயல்முறை ஆணை நகல் **எ.ம.சா.ஆ.2**. 28.09.2022ந் தேதியிட்டட அரசு நாளிதழ் பிரசுரம் 'ABSTRACT' நகல் **எ.ம.சா.ஆ.3** (இந்த அரசாணை நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் ஆட்சேணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). 15.10.2022ந் தேதியிட்ட நாகப்பட்டினம் வருவாய் கோட்ட அலுவலரால் நாகப்பட்டினம் நகர காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம் நகல் **எ.ம.சா.ஆ.4.** 15.10.2022ந் தேதியிட்ட நாகப்பட்டினம் வருவாய் கோட்ட அலுவலரால் நாகப்பட்டினம் TANGEDCO க்கு அனுப்பப்ட்ட கடிதம் நகல் **எ.ம.சா.ஆ.5**. 17.10.2022ந் தேதி நாகப்பட்டினம் வருவாய் கோட்ட அலுவலரால் நாகப்பட்டினம்

மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்ட கடிதம் நகல் **எ.ம.சா.ஆ.6**. 22.01.2026ந் தேதியிட்ட நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரால் வருவாய் கோட்ட அலுவலர் நாகப்பட்டினம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் நகல் **எ.ம.சா.ஆ.7.**

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

கடந்த 17.10.2022ந் தேதி மனுதாரருக்கு சொந்தமான ஒரு கட்டிடத்தில் ஒரு பகுதியில் சீல் வைக்கும் சமயத்தில் நான் அந்த அலுவலகத்தில் பணியில் இல்லை என்றால் சரிதான். தற்சமயம் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் 1 முதல் 4 எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் குறிப்பிட்டு எந்த விபரமும் கூறபடவில்லை என்றால் சரியல்ல. எதிருரையை நான் நேரடியாக இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை அந்த எதிருரையில் எந்த விபரங்கள் பதிலுரைகள் கூறப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் 1 முதல் 4 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் அளிப்பது குறித்து எவ்வித எழுத்து பூர்வமான அனுமதியும் பெறவில்லை என்றால் வாய்மொழியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த வாய்மொழி உத்தரவு படி சாட்சியம் அளிப்பது ஏற்புடையதல்ல நீங்கள் சட்டப்படி நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிக்க எழுத்து பூர்வமான உத்தரவு பெற்று அதனை நீதிமன்றத்தில் உரிய அனுமதி பெற்று அதன் பின்னிட்டு தான் ஆவணங்களையும் சாட்சியங்களையும் அளிக்க முடியும் என்றால் சரிதான். மனுதாரர் முகமது நாஜிம் தான் வழக்கு சொத்து கட்டிடத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். தடைசெய்யப்பட்ட

அமைப்பானது அந்த கட்டிடத்தின் ஒரு பகுதியில் வாடகைக்கு இருந்ததாக கூறப்படுகிறது என்றால் சரிதான். அந்த வாடகை கட்டிடத்தில் உள்ள பொருட்களை அங்கேயே வைத்து சீல் வைத்து பூட்டிவிட்டோம் என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் தந்த அரசாணையில் எந்தவித அறிவிப்பையும் கட்டிடத்தின் உரிமையாளரான முகமது நாஜிம் என்பவரிடம் சீல் வைப்பதற்கு முன்பும் சீல் வைத்த பின்பும் நகல் தரவில்லை என்றால் சரிதான். மனுதாரர்தான் மனு சொத்து கட்டிடத்தின் உரிமையாளர் என்பது குறித்து உரிய வருவாய் ஆவணங்கள், நகராட்சி ஆவணங்கள், மின் இணைப்பு ஆவணங்கள் ஆகியவற்றை சரிபார்த்தோமா என்றால் இல்லை. 5ம் எதிர்மனுதாரர் கடந்த ஆகஸ்ட் மாதம் 2022ந் தேதி வரை சட்டப்படியான வாடகையை மனுதாரர் வசம் கொடுத்துள்ளார் என்பது குறித்தும், அதன் பின்னிட்டு எவ்வித சட்ட விரோதமான செயல்பாடுகள் மனு சொத்து கட்டிடத்தின் நடைபெறவில்லை என்றால் சரிதான். அந்த மனு சொத்து கட்டிடத்தின் கைப்பற்ற சொத்துகள் அனைத்தும் 5ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது தான் அதற்கு உரிய inventary sheet ல் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. இந்த கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கும் மனுதாரருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். மனுதாரருக்கும், தடைசெய்யப்பட்ட அமைப்பிற்கும் அதில் கூறப்பட்ட குற்ற சம்பவங்களுக்கும் இந்த மனுதாரருக்கும் எவ்வித நேரடியான மறைமுகமான சங்கதிகள், தொடர்புகள் இல்லை என்றால் சரிதான்.

இந்த பூட்டி சீல் வைக்கப்பட்ட பொருட்களை நீதிமன்ற உத்தரவின்படி உரிய காவல் துறையிடமோ, அரசிடமோ ஒப்படைத்து, மனுதாரரின் கட்டிட சொத்தை மீண்டும் சீல் அகற்றி மனுதாரர் வசம் ஒப்படைக்க எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். UAPA சட்டபடியும் இயற்கை நியதிபடியும் அரசியல் அமைப்பு சட்டப்படியும் கட்டிட உரிமையாளராகிய மனுதாரருக்கு எவ்வித வாய்ப்பும் வழங்காமல் மனு சொத்திற்கு சீல் வைத்ததால் அது சட்டப்படி ரத்து செய்யபட வேண்டியது என்றால் சரிதான்.

<u>5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

5ம் எதிர்மனுதாரர் அலுவலகம் வைத்து செயல்பட்டதாக சொல்லப்படும் இடத்தை 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் பூட்டி சீல் வைத்ததற்கு முன்பு நாகப்பட்டினம் கிராம நிர்வாக அலுவலர் அந்த இடத்தை அடையாளம் காட்டினார் என்பதற்கு எவ்வித குறிப்புகளும் நான் தாக்கல் செய்த ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். பூட்டி சீல் வைக்கப்பட்ட அறைக்குள் இருந்த பொருட்களை பயன்படுத்தி தான் 5ம் எதிர்மனுதாரர் UAPA சட்டத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டார் என்பதற்கான விபரங்கள் எதுவும் நான் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் இல்லை என்றால் சரிதான். தற்போது வரை பூட்டி சீல் வைக்கப்பட்ட அறைக்குள் தான் 5ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்று சொல்லப்படும் பொருட்கள் உள்ளது என்றால் சரிதான். மனுதாரர் மற்றும் 5ம் எதிர்மனுதாரர்

குறித்து எனது நிரூபண பிரமாண பத்திரத்தின் 2ம் பக்கத்தில் 2வது பாராவில் கூறியுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரிந்தவை அல்ல அவை எனது உயர் அதிகாரி சொன்ன விபரங்கள் ஆகும். அந்த பாராவில் சொல்லியுள்ள விபரங்கள் கட்டிட உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் கட்டுபட்ட சட்டத்திற்கு உட்பட்டவை என்றாலும் அது குறித்து UAPA சட்டத்தில் எவ்வித தரவுகளும் இல்லை என்றாலும் சரிதான். நான் சொல்வது போல 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் பூட்டி சீல் வைத்த மனுதாரருக்கு சொந்தமான கட்டிடத்தின் ஒருபகுதியை 5ம் எதிர்மனுதாரர் பயன்படுத்தி வந்த அறையில் உள்ள சாதனங்களை கொண்டு எவ்வித சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 5ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பொருட்களை நீதிமன்ற உத்தரவின்படி அவர் பெறுவதற்கு உரிமையுள்ளவர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மனுதாரருக்கு சொந்தமான கட்டிடத்தின் ஒரு பகுதியில் வைக்கப்பட்டுள்ள சீலை அகற்றி அதில் உள்ள பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தாலோ அல்லது வருவாய் துறையோ காவல் துறையோ பயன்படுத்தி வைத்துகொண்டாலோ அது குறித்து 5ம் எதிர்மனுதாரருக்கு ஆட்சேபணை இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.